# அ. கலிய மூர்த்தி த.கா.ப

# முன்னாள் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்

# திருச்சிராப்பள்ளி

முன்னாள் காவல் துறை கண்காணிப்பாளரான திரு.அ.கலியமூர்த்தி தஞ்சை மாவட்டம் பூதலூரைச் சேர்ந்தவர். இவரது தந்தை பெயர் அய்யாவு, தாயார் பெயர் காமுஅம்மாள் ஆவர். ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

இவர் 1976ம் ஆண்டு காவல் துறை அதிகாரியாக பணியில் சேர்ந்து 35 ஆண்டுகள் திருச்சி, கோவை, சென்னை ஆகிய மாவட்டங்களில் மிகச்சிறப்பாக பணியாற்றியவர்.

அகில இந்திய அளவில் நடந்த காவல் துறை புலனாய்வு மற்றும் துப்பாக்கி சுடும் போட்டிகளில் 1980,1983,1986 முறையே நாசிக், லக்னோ, காஷ்மீர் ஆகிய இடங்களில் தமிழகத்தின் சார்பாக கலந்து கொண்டு மூன்று முறை தங்கப்பதக்கம் பெற்று தமிழக காவல்துறைக்கு பெருமை சேர்த்தவர் என்பது குறிப்பிடதக்கது.

1996ம் ஆண்டு திருச்சி சிறப்பு புலனாய்வு பிரிவு அதிகாரியாக பணிபுரியும் போது பாண்டியன் எக்ஸ்பிரஸ் தொடர்வண்டியில் குண்டு வைத்த தீவிரவாதிகளையும்,
2001ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் கொலை வழக்கில் மகராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த நிழல் உலக தாதாக்களையும் தனது சிறப்பான புலன் விசாரணை மூலம் கண்டுபிடித்து கைது செய்தது போன்றவைகளுக்காக தமிழகத்தின் சிறந்த புலனாய்வு அதிகாரிக்கான தங்கப் பதக்கத்தை தமிழக முதல்வரிடம் பெற்றவர்.

2001ம் ஆண்டு தீவிரவாதிகளை தனது உயிரையும் பொருட்படுத்தாமல் பிடித்ததற்காக தமிழக முதல்வரின் வீரதீர செயலுக்கான தங்கப்பதக்கத்தையும் பெற்றவர்.

2002ம் ஆண்டு சென்னையில் பணிபுரிந்த போது தீவிரவாதிகளுடன் நேருக்குநேர் ஏற்பட்ட துப்பாக்கி சண்டையில் கையில் குண்டடி பட்டும் தைரியமாக இரண்டு தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றதற்காக தமிழக அரசு இவருக்கு சிறப்பு பதவி உயர்வு வழங்கி கௌரவப்படுத்தியது.

2006ம் ஆண்டு ரவுடிசியத்தை ஒழிப்பதற்கான சிறப்பு அதிரடிபடையின் தலைவராக அரசால் நியமிக்கப் பட்டு ஆறு மாதத்திற்குள் டெல்டா மாவட்டங்களில் ரவுடிகளை முழுமையாக ஒழித்து அமைதியை நிலைநாட்டி தமிழக முதல்வரின் தங்கப்பதக்கத்தையும் மற்றும் பொதுமக்களின் பாராட்டையும் பெற்றவர்.

2008ம் ஆண்டு சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா முழுவதும் வங்கி கொள்ளையில் ஈடுபட்டு வந்த திருச்சி ராம்ஜி நகர் கொள்ளையர்கள் 100 பேரை ஒரே இரவில் கைது செய்து சிறையில் அடைத்ததோடு மட்டுமின்றி, அவர்கள் மனம் திருந்தி வாழ அரசிடமிருந்து ரூபாய் 1 கோடிக்கும் மேலாக நிதி உதவி பெற்றுத் தந்து அவர்களின் வாழ்கையில் ஒளியேற்றியவர்.

2006ம் ஆண்டு திருச்சியில் முதல்முதலாக நவீன கட்டுபாட்டு அறையை உருவாக்கி போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி, விபத்துகளை வெகுவாக குறைத்து விலை மதிக்க முடியாத பலரின் உயிர்களை பாதுகாத்தவர்.

2008ம் ஆண்டு இவருடைய அப்பழுக்கில்லாத சேவையைப் பாராட்டி இந்திய அரசு காவல்துறையின் மிக உயரிய விருதான ஜனாதிபதி விருதினை அன்றைய ஜனாதிபதி திரு.A.P.J.அப்துல்கலாம் அவர்களின் கரங்களில் கொடுத்து கௌரவித்தது.

பணி ஓய்வுக்குப் பிறகும் கிராமப்புற ஏழைகளுக்கு உதவும் எண்ணத்தில் தனது சொந்த ஊரில் தனது துணைவியாரின் பெயரில் “ சூரியா மருத்துவமனை “ என்ற ஒன்றை நிறுவி மருத்துவ மேற்படிப்பு படித்த தனது பிள்ளைகள் மூலம் மக்களுக்கு சேவை செய்து வருகிறார்.

உலக அளவில் பேச்சுலகில் யாருமே இதுவரை சாதித்திராத உலக சாதனையை 2018ம் ஆண்டு நிகழ்த்திக் காட்டியவர்.100 நாட்களில் 70 வேறுபட்ட இடங்களில், 70 மாறுபட்ட தலைப்புகளில், 1000 பேருக்கும் மேலானவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டு எல்லாக் கூட்டங்களிலும் 1 மணி நேரத்திற்கு குறையாமல் தொடர்ந்து பேசி இருந்ததால் அது உலக சாதனை இவர் 100 நாட்களில் 76 கூட்டங்களில் பேசி பேச்சு உலகில் முதல் உலக சாதனையைப் படைத்துள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவருடைய கல்வியின் முக்கியத்துவம் குறித்த பேச்சினை தமிழக அரசு பள்ளி கல்வித் துறை 11ம் வகுப்பு புதிய பாடத்திட்டத்தில் பொது தமிழ் புத்தகத்தில் சேர்த்துத் தமிழக காவல் துறை உயர் அதிகாரியான இவரை தமிழக கல்வித்துறை பெருமைப் படுத்தியுள்ளது.

இவரின் மனைவி பெயர் சூரியகலா, இவருடைய மகன் Dr.K. Ananth M.D(PAED), மகள் Parimal Rani M.D (O.G), மருமகன் Dr.K.Karthikeyan M.S (Ortho), மருமகள் Dr. Keerthana priyadarshini DNB (O.G) அனைவருமே சிறந்த மருத்துவர்கள்.

சமூக ஊடகங்களான முகநூல், whatsapp, youtube, தொலைகாட்சி, வானொலி அனைத்திலும் இவரது உரைவீச்சு மிகவும் பிரசித்தி பெற்றது. மலேசியா சிங்கப்பூர், சவூதி குவைத் அமெரிக்கா என்று பல்வேறு உலக நாடுகளில் தொடர்ந்து உரையாற்றி வருகிறார்.

தேசத்தின் எதிர்காலம் வகுப்பறைகளில் தான் தீர்மானிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த இவர் தமிழகத்தின் நூற்றுக்கணக்கான கல்லூரிகளிலும்,பள்ளிக்கூடங்களிலும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் மற்றும் லட்சகணக்கான மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில், தனது அறிவு பூர்வமான அழகு தமிழ் பேச்சால் அனைவரின் உள்ளங்களிலும் ஒளியேற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.